வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

**Press Release No: 13** **Date: 19.08.2025**

**VOC Port Scales New Heights in Windmill Blade Handling**

VOC Port recorded notable growth in windmill blade handling. In July 2025 alone, the Port has handled 343 windmill blades, reflecting a remarkable 90.56% increase compared to the 180 blades handled in July 2024. During the same month, the Port also facilitated the handling of 8 windmill blade and accessory ships, registering a 100% growth over the 4 ships handled in July 2024.

Windmill blades are predominantly handled at Berth VOC-5, VOC-6 and VOC-3. To support such operations, the Port employs two crawler cranes and three harbour mobile cranes, enabling the safe and efficient handling of these oversized cargoes.

Facilitating the growing windmill blades handling, the Port has established a dedicated storage facility of about 1,00,000 square metres within the customs-notified area, along with an exclusive gate for their movement. This infrastructure ensures streamlined operations and secure accommodation of oversized cargo, thereby strengthening the renewable energy supply chain.

Port’s infrastructure further supports efficient handling through well-planned, congestion-free roads that allow the timely arrival of windmill blades. In addition, a skilled workforce ensures the safe and smooth loading of blades and accessories. These components, manufactured in Bengaluru, Trichy, and Chennai, are primarily exported to global destinations including the United States, Turkey, Australia, Spain, Finland, and other European nations.

Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, emphasized that this achievement further strengthens VOC Port’s position as the preferred hub for windmill blade exports among Indian Ports. He also highlighted that the Port is developing a dedicated terminal exclusively for handling windmill blades and components.

The above details were furnished in a Press -Release by the V.O. Chidambaranar Port Authority today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

பத்திரிக்கை செய்தி :13 நாள்: 19.08.2025

**வ.உ.சிதம்பரனார் துறைமுகம் காற்றாலை இறகுகளைக் கையாளுவதில் புதிய வளர்ச்சியை எட்டியுள்ளது**

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் காற்றாலை இறகுகளைக் கையாளுவதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்று சாதனைப் படைத்துள்ளது. இந்த ஜீலை மாதத்தில் 343 காற்றாலை இறகுகளை கையாண்டு, கடந்த ஆண்டின் ஜீலை மாதத்தில் கையாண்ட அளவான 180 காற்றாலை இறகுகளை விட 90.56% அதிகமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. மேலும், இதே மாதத்தில் 8 காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாக கப்பல்களை கையாண்டு கடந்த ஜீலை மாதம் கையாண்ட 4 கப்பல்களைவிட அதிகமாக கையாண்டு 100% அதிக வளர்ச்சியை பெற்றுள்ளது.

இந்த காற்றாலை இறகுகள் பெரும்பாலும் வ.உ.சி சரக்குதளம் 5, 6 மற்றும் 3 ஆகிய கப்பல் தளங்களில் கையாளப்படுகின்றன. இத்தகைய பெரிய சரக்குகளை பாதுகாப்பாகவும், திறமையாகவும் கையாளுவதற்கு வசதியாக துறைமுகம், இரண்டு பெரிய வகை கையாளும் இயந்திரங்களையும் (crawler cranes), மூன்று நகரும் பளுதூக்கி இயந்திரங்களையும் (Harbour mobile cranes) பயன்படுத்துகிறது.

அதிகரித்து வரும் காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாகங்களின் ஏற்றுமதியினை கருத்தில் கொண்டு பாதுகாப்பான முறையில் சேமிப்பதற்கு வசதியாக துறைமுகத்திற்குள் சுமார் 1,00,000 சதுர மீட்டர் நிலப்பரப்பினை துறைமுகம் ஒதுக்கியுள்ளது. மேலும், இந்த காற்றாலை இறகுகளின் இயக்கத்திற்காக பிரத்தியோகமான நுழைவாயிலையும் துறைமுகம் அமைத்துள்ளது. துறைமுகத்தின் இந்த உள்கட்டமைப்பு இத்தகைய மிகப்பெரிய உபகரணங்களை பாதுகாப்பான முறையில் தடையில்லாமல் கையாளுவதற்கு உதவியாக அமைந்துள்ளது. இது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்த உதவியாக உள்ளது.

நெரிசல் இல்லாத சாலை போக்குவரத்தின் மூலம், காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாகங்கள் விரைவாக துறைமுகத்தை வந்தடைவதற்கு வசதியாக தேசிய நெடுஞ்சாலைகள் துறைமுகத்தினை இணைக்கின்றன. மேலும் துறைமுகத்தின் திறமையான பணியாளர்களினால் இத்தகைய சரக்குகளைப் பாதுகாப்பாகவும் சீராகவும் கையாள முடிகிறது. இந்த காற்றாலை இறகுகள் மற்றும் அதன் உதிரிபாகங்கள் பெங்களூரு, திருச்சி மற்றும் சென்னை ஆகிய ஊர்களில் இருந்து தயாரிக்கப்பட்டு அமெரிக்கா, துருக்கி, ஆஸ்திரேலியா, ஸ்பெயின், பின்லாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

திரு சுசாந்த குமார் புரோகித், இ.ர.ப.மி.பொ, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் கூறுகையில் காற்றாலை இறகுகளை ஏற்றுமதி செய்வதில் இந்திய துறைமுகங்களில் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தை ஒரு விருப்பமான துறைமுகமாக நிலைப்படுத்துவதற்கு இச்சாதனை பெரிதும் உறுதுணையாக அமையும் என்று கூறினார். மேலும் அவர் காற்றாலை இறகுகளைக் கையாளுவதற்கு வசதியாக துறைமுகம் ஒரு பிரத்தியோகமான முனையத்தை உருவாக்க உள்ளதாகவும் கூறினார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி